## யாழ்ப்பாணம் வரும் கல்வி அமைச்சர் இரு நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்குபற்றுவார்

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 12 ஸபர் 15 இதழ் 346
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-1-78

சன் சயின் சோப்
பாவனையாளர்கள் மிகவும் விரும்பி பாவிப்பது சன் சயின் சோப்
இலங்கையில் எந்தக் கடையிலும் சன் சயின் சோப் என்று கேட்டு வாங்கி அதன் தரத்தை அறிந்து கொள்ளுங்கள்
லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்யும் கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்னவை வரவேற்பதற்கான சகல .ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்தில் இரு நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்து கொள்வர்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறும் கவிஞர் இக்பால் நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் கல்வியமைச்சர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று அங்கு நடைபெறும் வழிபாட்டில் பங்குபற்றுவாரென்று கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் . நடைபெறவிருக்கும் இக்பால் நினைவு தின விழாவில் வடபகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களும் உரையாற்றுவார்கள். [க]

# புதிய மந்திரி சபையில் கல்வி, நிதியில் மாற்றம்?

[கொழும்பு]

சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியாகப் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவியேற்பதைத் தொடர்ந்து மந்திரிசபை மூற்றாக மாற்றியமைக்கப்படவிருப்பதால் நிதி, கல்வி போன்ற முக்கிய அமைச்சுகளில் மாற்றம் ஏற்படலாம் என்று தெரிகிறது.

முக்கியமாகப் புதிய கல்வியமைச்சராகத் தற்போது நிதியமைச்சராக இருக்கும் திரு. ரொனி டி. மெல் நியமிக்கப்படுவாரெனப் பலத்த ஹேஸ்யம் அடிபடுகிறது.

இதேசமயம் நிதியமைச்சராகத் தற்போது வர்த்தக அமைச்சராக இருக்கும் திரு. லலித் அத்துலத்முதலி நியமிக்கப்படலாமெனக் கூறப்படுகின்றது.

போக்குவரத்து அமைச்சர் ஜனப் முகமத் மற்றொரு அமைச்சுக்கு மாற்றப்படுவாரென்றும், பிரதிப் போக்குவரத்து அமைச்சர் திரு. எச். குலரத்ன போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்படுவாரென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மாவட்ட அமைச்சர்கள் நியமனம் காலவரையின்றிப் பின்போடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மாவட்ட அமைச்சர்களாக நியமிக்கப்படவிருந்த சிலருக்கும் புதிய மந்திரி சபையில் இடம் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கனகர் பிரதியமைச்சர்?

யாழ்ப்பாண மாவட்ட மந்திரியாக நியமிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்பட்ட பொத்துவில் எம். பி. திரு. எம். கனகரத்தினம், பிரதி விவசாய அமைச்சராக நியமிக்கப்படுவாரென்றும் கூறப்படுகின்றது. அவர், மாவட்ட அமைச்சர் பதவியை விரும்பவில்லையென்றும், பிரதியமைச்சர் பதவியையே விரும்புவதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இதேசமயம் சிறுபான்மையினர் நலனைக் கவனிக்கப் புதிதாக ஒரு அமைச்சர் நியமிக்கப்படவிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. பிரதியமைச்சர் நியமனங்களிலும் புதிய முகங்கள் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [ம]

## தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து 'இராசு' விலகமாட்டார்!
### அரசியல் வட்டாரங்களில் நம்பிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை தமிழர் கூட்டணியிலிருந்து எக்காரணம் கொண்டும் வெளியேற மாட்டார் என்று நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

திரு. இராசதுரை தமிழர் விடுதலைக்கூட்டணியின் முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

மாவட்ட அமைச்சர் பதவி குறித்து தமிழர்கூட்டணியின் தீர்மானத்துக்கமையவே திரு. இராஜதுரை நடந்துகொள்வார் என்றும் தெரிகிறது.

தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலில் பெரும் சர்ச்சைக்குரியவராக இருந்த திரு. இராசதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகி ஐ. தே. கவில் சேருவார் என்றும் பின்னர் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க முயற்சி செய்கிறார் என்றும் பல வதந்திகள் அரசியல் வட்டாரங்களில் கிளப்பப்பட்டன.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. எஸ். இராசதுரைக்கே மட்டக்களப்பு மாவட்ட மந்திரிப் பதவி வழங்கப்படுமெனவும் அரசியல் வட்டாரங்களில் உறுதியாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. (ம-இ)

## மண்டைதீவு கொலைவழக்கு

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவு கொலைவழக்கில் எதிரி கைமோசக்கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்குவது ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இவ் வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ் வழக்கில் 76 ஆகஸ்ட் 23ல் மண்டதீவில் சுப்பிரமணியம் கோகிலவாசனை கொலைசெய்ததாக, செல்லையா நித்தியானந்தன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா, சட்டத்தரணி எஸ். கே. நரேந்திரன் ஆகியோர். ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானார். இவ் வழக்கு பெப்ரவரி 13ம் தேதிவரை தீர்ப்பளிப்பதற்காக ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## மும்மொழித்திட்டம் திணிப்புக்கு ஒரு முகமூடி
### மத்திய வங்கி தமிழ் ஊழியர் கருத்து

(கொழும்பு)

தமிழுக்கு ஒத்த உரிமை அடிப்படையில், அரசியல் தலைமை வழங்கப்படாத நிலையிலும் தமிழருக்கு நிலையான அரசியல் பாதுகாப்பு வழங்கப்படாத நிலையிலும், மும்மொழித் திட்டம் என்ற முகமூடி அணிந்து, சிங்களத்தைத் திணிக்கவரும் அரசின் சதித்திட்ட நோக்கினை மிக வன்மையாக எதிர்ப்பதோடு, இத்துறையில் தமிழ் மக்கள் மிக விழிப்புடன் செயலாற்றவேண்டும் எனவும் கோரி நிற்கின்றோம்;

மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள்
# அமைச்சர்களின் வரவேற்புக்களில் கலந்துகொள்ளக் கூடாது
### மகளிர் பேரவைக்குழு தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

"தமிழர்விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் தம் உத்தியோகபூர்வ அலுவல்களில் மாத்திரமே கலந்துகொள்ளவேண்டும். அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வரவேற்பு உபசாரங்களில் அவர்கள் கலந்து கொள்ளக்கூடாது''

மேற்படி தீர்மானம் தமிழ் மகளிர்பேரவை செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

### மும்மொழித் திட்டம்

அரசாங்கத்தின் மும்மொழித் திட்டம்பற்றி தமிழர் விடுதலைக்கூட்டணி எடுத்த தீர்மானத்தைப் பூரணமாக ஏற்றுக்கொள்வது, மும்மொழித் திட்டஅமுலை எதிர்க்கும் வகையில் ஒவ்வொரு கல்லூரிகளிலும் மாணவர் அணிகள் அமைக்கப்படவேண்டும் என்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### கல்விமந்திரி விஜயம்

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்னவின் யாழ் விஜயத்தை மும்மொழித் திட்டம் கைவிடப்படாதவரை ஏற்பதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பெப்ரவரி 4-ம் திகதி நடைபெறும் அரசாங்கவைபவங்கள் எதிலும் பொதுமக்களை கலந்து கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

மகளிர் பேரவை கிளைகள் அமைப்பு, பேரவையின் பொதுச்சபையைக் கூட்டுதல் பற்றி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறிய கருத்துக்களை சபை ஏற்றுக் கொண்டது. (உ)

# தமிழர் நிலை பற்றி பிரி. தூதரிடம் அமிர்

[கொழும்பு]

இங்கிலாந்து நாட்டில், ஸ்கொட்லண்ட் மக்களுக்கு சுயாட்சிவழங்க நடவடிக்கை எடுப்பது போல், இந்நாட்டிலும் தமிழ்மக்களுக்கு உரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை"

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், நேற்று தம்மை சந்தித்த பிரிட்டிஷ் ஸ்தானிகரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள அரசியல் நிலைமையையும், தமிழர் பிரச்னைகளையும் திரு. அமிர்தலிங்கம் அவரிடம் விரிவாக எடுத்துக் கூறினர்

அகதிகள் பிரச்னையையிட்டு அரசு, அக்கறை செலுத்தவில்லையென்றும், இதனல் அகதிகள் பிரச்னை தீர்க்கப்படாமலிருப்பதாகவும் பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கு அவர் எடுத்துக்கூறினர்.

அகதிகளுக்கு வழங்கப்பட்ட பணம் அவர்களுக்கு போய்ச் சேரவில்லையென்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். [ம]

# ஜே. ஆர். வைத்திருக்கும் "மாஸ்டர் பிளான்" என்ன?

## சுயாட்சிக்கழகத் தலைவர் விளக்குகிறார்

[யாழ்ப்பாணம்]

கடந்த 30 வருடகாலமாக இலங்கையை சிங்களமயமாக்க முயன்ற டி. எஸ். சேனநாக்கா, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்காபோன்றவர்களை விட சிங்களமயத் திட்டத்தை நிறைவேற்ற "மாஸ்டர் பிளான்" உடையவர் தற்போதைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

கட்டுநாயக்காவில் சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பதில் எமக்கு எதுவித அக்கறையும் இல்லை. தமிழர் பிரதேசத்தில் திருகோணமலையில் சுதந்திர வர்த்தகவலயம் விஸ்தரிக்கப்படுவதைத்தான் நாம் எதிர்க்கின்றோம். சிங்கள தெற்குப் பகுதி அரசியல்வாதிகள் எங்கள் பகுதிக்கு தொழிற்சாலைகளைத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற போதும், காலியிலே சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவாமல் திருகோணமலையில் நிறுவ முயல்வது சிங்களகுடியேற்றத்திற்கான ஜே ஆர் ஜெயவர்த்தனவின் "மாஸ்டர் பிளான்" தான் காரணம்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் ஹரன் தியேட்டரில் நடைபெற்ற இன்றைய அரசியல் நிலை பற்றிய பொதுக் கூட்டத்தில் சுயாட்சிக்கழகத்தலைவர் திரு. வி. நவரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; "மும்மொழித் திட்டத்தை நாம்மூர்த்தண்யமாக எதிர்க்க வேண்டும். 10 வருடங்களுக்கு முன்னரே இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் ஐ தே க வும் தமிழரசுக்கட்சியும் கூட்டுச் சேர்ந்திருந்த காலத்தில் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபையில் மும்மொழித் திட்டத்தை ஆதரித்து வாதாடினர். ஆனால் இன்று எனக்கு சந்தோசம்; தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஸ்தாபன ரீதியாக மும்மொழித்திட்டத்தை எதிர்ப்பது என்று தீர்மானித்துள்ளது. தமிழ் பிரதேசத்தில் ஒரு தொகுதியில் 30 அல்லது 40 பாடசாலைகள் இருந்தால் மும்மொழித்திட்டம்மூலம் சிங்களம் படிப்பிக்க எவ்வளவு ஆசிரியர்கள் வருவார்கள். ஆசிரியர் ஒருவர்தான். ஆனால் அவருடன் அவருடைய குடும்பமும் வரும். குடும்பத்திற்கு 5 பேர் இருப்பதாக வைத்துக்கொண்டால் கூட எத்தனை சிங்களவர்கள் எங்கள் நிலத்தில்குடியேறுவார்கள். எங்கள் நிலம் பறிபோகும்.

இலங்கை முழுவதும் இரு சமூகங்களும் கலந்திருந்தால், தமிழர்களது உயிருக்கும் சொத்துகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படும். 58ல் 9 கப்பல்களில்ஏறி காங்கேசன் துறையில் வந்து இறங்கினர் எங்கள் தமிழர்கள். சென்ற முறையும் தமிழர் சிங்களவரோடு ஊடுருவிப் பரந்திருந்த இடங்களில்தான் அநீதியும் அட்டூழியமும் அதிகமாகநடைபெற்றன.

"சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்ஈழத்துக்கு எனசர்வஜன வாக்குரிமை கேட்ட தமிழர் ஐக்கியவிடுதலைக்கூட்டணி இன்று பொறுத்திருந்து பார்ப்போம், பிரதமர் என்னசெய்கிறார் பார்ப்போம் என்று கூறுகின்றார்கள். இன்று என்ன கிடைக்கப் போகின்றதென்று த ஐ வி கூட்டணியினர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

திரு ஜே ஆர் ஜெயவர்த்தன என்ன தந்தால் த ஐ வி கூட்டணி போராடாமலிருக்குமென்று இதுவரை யாரும் சொல்லவில்லை.

த ஐ வி கூட்டணியினர் ஜே ஆரிடம் சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதாக நான் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு த ஐ வி கூட்டணி நபர் ஒருவர் எனக்குச் சொன்னார். அவை என்ன கோரிக்கைகள். அதைமக்களுக்குச்சொல்ல த ஐ வி கூட்டணி ஏன் தயங்குகிறது.

"பிரதமர் மொழிச்சட்டத்தை மாற்றமாட்டேன் என்கிறார், குடியேற்றக் கொள்கையும் டி எஸ் சேனநாயக்காவின் கொள்கைதான் என்று சொல்லும் போது கூட்டணியினர் ஏன் இன்னும்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமனம், குடியேற்றங்கள் ஆகியவற்றைஉயிரைக் கொடுத்தும் நிற்பாட்ட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

சட்டத்தரணி ந. ஸ்ரீஸ்காந்தா பேசுகையில் "சிங்களமாணவர்கள் தமிழ் படித்தாலும் சிங்களம்மட்டும் சட்டம் இருக்கும்வரை தமிழ் மாணவர்கள் சிங்களம்படிக்கத் தயாராயில்லை."

இந்த அரசாங்கத்தின் 6 வருட காலத்துக்குள் கிழக்குப் பகுதியையும் சேர்த்து தமிழ் ஈழம் கேட்கமுடியாதநிலை ஏற்பட்டுவிடும், பிரிவினைத்தடைச் சட்டம் அமுலுக்கு வந்தாலும் எங்கள் சட்டத்தரணிக்குரிய கறுப்புக் கோட்டுகளையும் இழந்து நாம்போராடுவோம்" என்று குறிப்பிட்டார்.

# யாழ். வளாகத்துக்கு பல்துறை நூல் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

"மைற்" நிறுவன அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா யாழ். வளாகத்துக்கு 1500க்கும் மேற்பட்ட நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சிறுகைத்தொழில்கள் எந்திரவியல் பரிபாலனத்துறை வைத்தியம் உயர்கணிதம் தொழில் நுட்ப ஆராய்ச்சி முதலானதுறைகள் பற்றியன இந்நூல்களாகும்.

யாழ் வளாகத்தலைவர் திரு. சு. வித்தியானந்தன் இந்நூல்களை கொழும்பில் வைத்து பெற்று நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேற்படி நூல்கள் தற்போது யாழ். வளாகத்தின் நூல்நிலைய அதிபர் திரு. ஆர். எஸ். தபமையாவின் தலைமையின் கீழ் வெவ்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு நிரல் செய்யப்படுகின்றன. இதன்பின் இவை பாதுகாப்பாக வளாக நூல் நிலையத்தில் வைக்கப்பட்டு வளாக மாணவருக்கு மட்டுமல்லாது வடமாகாணத்திலுள்ள கைத்தொழிலாளர் பொறியியலாளர் உயர்தர மாணவர்கள் வைத்தியர்கள் எல்லோரினதும் பாவனைக்கு ஒழுங்குகள் செய்யப்படும் எனத்தெரியவருகிறது. (உ)

# 25,000பேர் இழந்தனர்

[மட்டுவில்]

தென்மராட்சிப் பிரிவில் புதிய அரிசிக்கூப்பன் விநியோகம் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மொத்தம் 65,000 கூப்பன் பாவனையாளரில் சுமார் 25,000 பாவனையாளர் தமது இலவச அரிசிக்கூப்பன்களை இழந்துள்ளனர்.

# கைதடி ஆயுர் வைத்தியசாலை விரைவில் திறக்கப்படும்

## ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாண ஆயுள்வேத வைத்தியசாலையின் வாட்டுகளை வெகுவிரைவாக திறப்பதற்கு ஆயுள்வேத ஆணையாளர் திரு. பி. பி. வேரகொட நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

இம்மாத நடுப்பகுதியில் ஆணையாளர், வைத்தியசாலை அதிகாரி டாக்டர் என் கந்தையாவுடன் வைத்திய கல்லூரிக் கட்டிடங்களையும், வைத்தியசாலை கட்டிடங்களையும் பார்வையிட்டார்.

மேற்படி வைத்தியசாலையின் மலகூடப் பகுதி பாரியதிட்டமாக இருப்பதாலும், அதற்கு வேண்டிய இயந்திர உபகரணங்கள் இன்னும் வந்துசேராமையாலும், மிகவிரைவில் இதை செய்துதரும்படி ஆயுள்வேத ஆணையாளர் கேட்டுக்கொண்டதோடு யாழ் அரசாங்க அதிபரையும் இது விஷயமாக அவரின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

அத்துடன் கல்லூரியில் அமைந்துள்ள அகதிகள் முகாமை வெகுவிரைவில் மூடிவிட்டு கட்டிடத்தை தரும்படியும் கேட்டுக்கொண்டார். இதற்கு அரசாங்க அதிபர் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

வைத்திய அதிகாரி டாக்டர் என் கந்தையாவோடு வைத்தியசாலை அலுவலகத்தில் நடாத்திய கூட்டத்தின்போது வாட் திறப்பதற்குவேண்டிய சகல உபகரணங்களும் இருப்பதாக வைத்திய அதிகாரி கூறினார். இருந்தும் மலகூட வசதி செய்துமுடிக்காமையால் சற்று தாமதமடைய வேண்டியிருப்பதாகவும், மீண்டும் மாவட்ட என்ஜினியரை சந்தித்து மிகவிரைவில் நடவடிக்கை எடுக்கும்படி ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

வைத்தியசாலை வைத்திய அதிகாரி, மற்றும் ஊழியர்களினால் ஆணையாளர்க்கு தேநீர் உபசாரமும் அளிக்கப்பட்டது. (உ)

# தென்மராட்சி உ. அ. பிரிவில் கடந்த ஆண்டு நடந்த அபிவிருத்தி வேலை

[மட்டுவில்]

தென்மராட்சிப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1977-ம் ஆண்டு கிராம அபிவிருத்தி வேலைகளில் 69000 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதைவிட குளங்களின் புனரமைப்பு வேலைகள் சிரமதான மூலம் செய்யப்பட்டன. இதில் 17 குளங்கள் சிரமதான மூலம் புனரமைப்பு செய்யப்பட்டன.

இதில் கலந்து கொண்ட சிரமதானத் தொண்டர்களுக்கு மட்டும் ,3750 றூத்தல் மா 6225 றூத்தல் கருவாடு 1167 றூத்தல் சீனி 3501 றூத்தல் பருப்பு ஆகியனவும் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜே. தேவசகாயம் தெரிவித்தார்.


## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள பெண் நெசவாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஆ. கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா, 21/6, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். 8288

நன்றுகச் சமைக்கவும் இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கவும் தெரிந்த ஒருவர்உடன்தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். எஸ். சந்திரகுமார், 68/5, இராசாவின் தோட்டவீதி, யாழ்ப்பாணம். 8311

### பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I. (London) பரீட்சைக்கு சமனான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு, அதிபர் இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 8307

### தவறிவிட்டது

1977-ம் ஆண்டு வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் 174870 இலக்கம் கொண்ட லைசென்ஸ் ஆகியன கொண்ட பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. பத்மநாதன், உடுவில் வடக்கு, சுன்னாகம் அல்லது இந்திரா என்ஜினியேர்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8302

எனது 'FORD 18' சூட்கேஸ் 21-1-78 மாலை 6-30 மணிக்கு கண்டியிலிருந்து மாத்தளை ஊடாக யாழ்ப்பாணம் வந்த C. T. B. பஸ்ஸில் யாரோ நாவற்குளியில் இறங்கியவர் மாறிக்கொண்டுபோய் விட்டார். எனது சூட்கேசை Sound Engineers 194 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் விலாசத்தில் கொடுத்து மாறியதை எடுக்கவும். -P வீரையா. 8303

### காணவில்லை

சனியோ M 2440 H கசெற் றேடியோ காணவில்லை. தகவல் A. ராமரத்தினம், 'ஸ்கந்தா' ஆனைக்கோட்டை. 8813

### விளம்பரம்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் மொத்த சில்லறை விற்பனை நிலையங்களின் கட்டிடத் திருத்த வேலைகளுக்கும், வெள்ளையடித்து மை பூசுவதற்கும் அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது. முழு விபரங்களையும் ரூபா 50/- வைப்புப் பணமாகச் செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர்
சு. ப. நோ. கூ. சங்கம்.

23-1-78. 8309

## சித்திர ஆசிரியர் தேவை

நிரந்தரமற்ற பகுதிநேர வரைதல் ஆசிரியர்
வாரத்தில் 2 நாட்கள்

தராதரம்: வரைதல் ஆசிரிய தராதரப்பத்திரம் அல்லது நுண்கலைக் கல்லூரிப் பயிற்சி நெறியைப் பூரணப் படுத்தியவர்.

வேதனம்: மணித்தியாலம் ஒன்றுக்கு 1 ரூபா 25சதம். முன் அனுபவம் முக்கியமாகக் கவனிக்கப்படும். வேதனம் வசதிகள் சேவைக் கட்டணத்திலிருந்து செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 31-1-78

நேர்முகப் பரீட்சை விபரம் பின் அறிவிக்கப்படும்.

அதிபர்,
யா/இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை.

8312

### வெளியீட்டுவிழா

'வரதர் வெளியீடு'
அளிக்கும்
இரண்டு புதிய நூல்கள்

1

தோழர்
வ. பொன்னம்பலம்
எழுதிய
'செந்தமிழர் ஆகிடுவோம்'

இன்றைய அரசியல் நிலையில் ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்க வேண்டிய அருமையான அரசியல் கொள்கை விளக்கம்.

ரூ. 2-60

2

ஈழத்தமிழகத்தின்
புகழ்மிக்க நாவலாசிரியர்
'செங்கை ஆழியான்'
எழுதிய

யானை

புதிய
அனுபவங்களுக்கிடையே
காதலும் வீரமும்
பொங்கித் ததும்பும்
புதுமையான கதை

ரூ. 2-60

-வெளியீட்டுவிழா-

25-1-78
புதன் (இன்று)
மாலை 6 மணிக்கு
யாழ். வீரசிங்கம்
மண்டபத்தில்

தமிழர் தலைவர்
அ. அமிர்தலிங்கம்
அவர்கள்
தலைமை தாங்குகிறார்.

கருத்துரை வழங்குவோர்:
ஒறேற்றர் சுப்பிரமணியம்
திரு. ந. சுப்பிரமணியம் எம். ஏ.

நூலாசிரியர்கள்:
தோழர்
வ. பொன்னம்பலம்
செங்கை ஆழியான்

அரசியலும் இலக்கியமும்
கலந்த
சில மணி நேரங்களைச்
சுவைக்க
தமிழ் மக்கள்
அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

— வரதர் வெளியீடு

ஈழநாடு
The Eelanaadu

# தொகுதிக்கு ஆயிரம்

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் ஆயிரம் பேருக்கு வேலைவழங்குவதென்ற புதியதிட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது.

காலியாக இருக்கும் வேலை பற்றி இனி வர்த்தமானியிலோ, பத்திரிகைகளிலோ விளம்பரம் செய்யப்படமாட்டாது.

அந்தத் தொகுதியில் தொழில் வழங்கும்குழுக்கள் நியமிக்கப்படும். இந்தக் குழுக்களுக்கு, தொகுதி எம். பி. வேலைவழங்கப்படவேண்டியவர்களைச் சிபார்சு செய்வரர். எம். பி. சிபார்சுசெய்பவர்களை இந்தக்குழு நேரில் அழைத்து அவர்களின் தகுதி, வேலை அனுபவம், வயது ஆகியஅடிப்படையில் வேலைவழங்கும் திட்டத்தை பூர்த்திசெய்யுமாம். இப்புதிய திட்டம் மார்ச் முதல் தேதிதொடக்கம் அமுலுக்கு வரவிருக்கிறது.

வேலையில்லாப் பிரச்னை தான் நாட்டின் மிகப்பெரிய பிரச்னையாக இருந்துவருகிறது. வேலையற்றோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு அரசியல்கட்சியும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாக வாக்குறுதியளித்தே வந்துள்ளன.

தகுதியின் அடிப்படையிலேயே வேலைவழங்கப்படுமென்று இன்றைய அரசாங்கமும் கூறுகிறது. இதற்கு முன் ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்களும் தெரிவித்தன.

முன்னைய அரசாங்கங்கள் பலருக்கு வேலைவாய்ப்பளித்ததென்பதை மறுக்கமுடியாது. ஆனால் தகுதியடிப்படையிலும், உண்மையிலேயே வேலையில்லாது கஷ்டப்பட்டவர்களுக்கும்தான் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டதென்று சொல்லமுடியாது.

எம். பி. க்களிடமிருந்தும் கட்சியமைப்பாளர்களிடமிருந்தும் சிபார்சுக்கடிதம் பெற்றால் அதுவே தகுதியாகக் கருதப்பட்டது.

சென்ற அரசாங்கத்தின் காலத்தில் இதுதான் ஒரே தகுதியாகக் கணிக்கப்பட்டது. இப்படி வேலைபெற்றோரே அதிகம்.

'கிட்' முறைஎன்றுஇன்று வர்ணிக்கப்படும் எம். பி. க்களின் அல்லது அமைப்பாளர்களின் சிபார்சுக் கடிதங்கள் நாட்டில் ஊழல் மலிவதற்குக் காரணமாக இருந்தது.

இந்த 'கிட்' முறை ஊழலுக்கே இடமாக இருந்ததாகவும் இதை ஒழித்துக்கட்டப்போவதாகவும் இன்றைய அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால் இன்றும் அது ஒழிந்த பாடாகஇல்லை.

இப்போதும் கூட நியமனங்கள், இடமாற்றங்கள் பழைய கதையாகவே இருக்கின்றன.

தொகுதிதோறும் ஆயிரம் பேருக்கு வேலை வழங்குவதென்பது வரவேற்கவேண்டிய திட்டம்.

இதிலும் எம். பி. க்களின் சிபார்சு தேவை. ஆளும் கட்சி எம். பிக்களில்லாத தொகுதிகளில்நிச்சயம்கட்சி அமைப்பாளர்களின் சிபார்சுகளேதேவைப்படும்.

எம். பி.க்களும், அமைப்பாளர்களும் அரசியல்வாதிகளே. அவர்களுடைய சிபார்சு அவர்களுடைய ஆதரவாளர்கள் அல்லது அவர்களின் 'தொண்டர்'களுக்குத்தான் கிடைக்கும்.

எம். பி. க்களிடமும், அமைப்பாளர்களிடமும் சிபார்சு செய்வதற்கு அவர்களுடைய ஆட்களின் சிபார்சுகள் தேவை.

ஆக மொத்தம்பழையபடி இத்திட்டமும் ஊழலுக்கே வழிவகுக்குமென்று எதிர் பார்க்கலாம்.

தகுதி அடிப்படையில் மட்டுமல்லாமல் குடும்பத்தின் நிலைமையையும் கணித்து அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் வேலை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டாலே பிரச்னையும் குறையும்; ஊழலும் ஒழியும்;

# முழங்காவில் குழாய்க்கிணறு திட்டத்துக்கு சகலதுறைகளிலும் உதவிகிட்டும்

## இளைஞர் குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் அரசாங்க அதிபர் உறுதி

[வண்ணார்பண்ணை]

"முழங்காவில் குழாய்க்கிணறு திட்டம் ஒருவிசேஷ திட்டமாக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகல துறைகளிலிருந்தும் இத்திட்டத்திற்கு உதவிகள் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்"

இவ்வாறு சனிக்கிழமை முழங்காவில் அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடந்த முழங்காவில் குழாய்க்கிணற்றுத் திட்டத்தில் இளைஞர்களை குடியேற்றுவது சம்பந்தமாக நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ. எல். விஜயபால தெரிவித்தார்.

யாழ். மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. எம். குலநாயகம் தலைமையில்நடந்த இக்கூட்டத்தில் பூநகரிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குணநாயகம், நீர்வள ஆராய்ச்சிச்சபை நிபுணர்கள், நிலஅளவைப் பகுதி அதிகாரி திரு. சிவசுப்பிரமணியம், திட்டமிடல் அபிவிருத்தி அத்தியட்சகர் உட்பட இத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் திரு. விஜயபாலர தொடர்ந்து கூறியதாவது:

"இத்திட்டத்தில்காணி வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்ட 291 இளைஞர்களில் 280 பேருக்கு காணிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பத்து இளைஞர்களுக்கு ஒரு குழாய்க்கிணறு வீதம் 28 கிணறுகள் உடனடியாகத்தோண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் ஒருகிணறு பூர்த்தியாகியுள்ளது. ஏனைய 27 குழாய்க் கிணறுகளும் அடுத்த மாதம் முதல் தோண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் கடந்த அரசாங்க காலத்தில் நீர்ப்பாசன இலாகாவிடம் இக்கிணறு தோண்டும் வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இப் புதிய அரசு இவ்வேலைகளை நீர் வளசபையிடம் ஒப்படைத்துள்ளது. இதனால் இவ்வேலைகள் துரிதமாக செயல்படுத்தப்படும். தெரியப்பட்ட 280 இளைஞர்களிடமும் எடுக்கப்பட்ட பங்குப்பணங்கள்கிணறு தோண்டுவதற்கும் வாய்க்கால் அமைப்பதற்குமே பயன்படுத்தப்படும்.

வீதிகள் அமைத்தல் போன்ற ஏனைய செலவுகள் அரசின் விசேட நிதியிலிருந்து செலவு செய்யப்படவுள்ளன. இத் திட்டம் ஒரு விசேஷ திட்டமாக அரசினால் கணிக்கப்பட்டுள்ளதால் சகல பாராளுமன்ற உறுப்பினர்களதும் ஒத்துழைப்புடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் நிதியிலிருந்தும் நிதி ஒதுக்க ஆலோசனை செய்து வருகின்றோம்,

'இத்திட்டம் ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் செயல்பட காலதாமதமாகியதை பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ஆனால் நாங்கள் இரண்டு ஆண்டுகளும் இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளிலே நடவடிக்கை எடுத்து வந்துள்ளோம்.

மன்னாரில் குழாய்க் கிணறுகள் தோண்டிவந்த நீர்வள நிபுணர்களை திரும்பி கொழும்புக்குச் செல்லாமல் இத்திட்டத்தில் கிணறுகள் தோண்ட தொடர்ந்து இங்கு இருப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளோம். விவசாய அமைச்சு இத்திட்டத்திற்கு விசேஷ உதவிகள் புரிய நடவடிக்கை எடுத்துள்ளோம் புதிய உப உணவு வகைகளை நவீன முறைகளில் பயிரிட இங்குள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும். இதற்கான விசேஷ திட்டங்களை விவசாய இலாகா மேற்கொள்ளும்.

அடுத்த காலபோகத்தில் அரசாங்கம் இத்திட்டத்தில் புதிய பயிர் இனங்களை அறிமுகம் செய்து அவற்றை விளைவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். இத்திட்டம் யாழ் மாவட்டத்தில் ஒரு விஷேட திட்டமாகவே அரசினால் கணிக்கப்படும் என்றார்.

மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. ஏ. எம். எம். குலநாயகம் பேசுகையில், 'இத் திட்டத்தில் உள்ள பெண்களுக்கு தனியான ஒரு குழாய்க் கிணறு கொடுக்கப்படும். ஆண்களுக்கு ஏனைய கிணறுகள் வழங்கப்படும். பத்துப் பேருக்கு ஒரு குழாய்க்கிணறு ஒப்படைக்கப்படும். ஒரு கிணற்றில் இருபது ஏக்கருக்கு நீர்ப்பாச்ச நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி ஒரு இளைஞருக்கு 2 ஏக்கர் வீதம் இருபது ஏக்கரும் பத்து இளைஞர்களிடம் கூட்டாக ஒப்படைக்கப்படும். அடுத்தமாதம்இதற்கானகுழுக்களிடம் காணிகள் காட்டப்படும் காணிகள்காட்டியவுடன் இளைஞர்கள் தமது கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு தனித்தனி குடிசைகளையோ அல்லது கூட்டாக மண்டபங்களையோ தற்காலிகமாகக் கட்டி தமது வேலைகளை தொடங்கவேண்டும். கிணறுகள் வெட்டும் வரை சும்மாயிருக்காது காணிகளை துப்புரவு செய்யும் வேலைகளை இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்.

வாய்க்கால்கள் அமைக்கும் வேலைகள் இன்னும் ஆரம்பிக்காததால் இளைஞர்கள் நிரந்தரமான கட்டடங்களைக் கட்டாது தற்காலிக இருப்பிடங்களையே அமைக்கவேண்டும் என்றார்.

இத்திட்டத்தில் காணி பெறுவதற்குத் தெரியப்பட்ட ஆண்களும் பெண்களும் மண்டபம் நிறைய காணப்பட்டனர். ஒவ்வொரு கிணற்றுக்கும் 10 பேர் வீதம் குழுக்கள் சேர்வதற்கும் மாவட்டக் காணி உத்தியோகத்தரினால் படிவங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைவர்கள் நியமிக்கப் பட்டனர்.

# வட்டு. தமிழ்ச் சங்கம் இரங்கல் செய்தி

(வட்டுக்கோட்டை)

பண்டிதமணி, வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை அவர்களின் மறைவு குறித்து வட்டுக்கோட்டைத்தொகுதித் தமிழ்ச் சங்கம் விடுக்கும் இரங்கல் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தனது இறுதிக் காலம்வரை நாவலர் வழிநின்று நாவலர் மகா வித்தியாலயத்தில்சேவை யாற்றிவந்த அமரர் வித்துவான் மு. சுப்பையபிள்ளையின் மறைவு குறித்து எமது தமிழ்ச் சங்கம் தனது அனுதாபத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

அமரர் வித்துவான் அவர்கள் சென்னை பல்கலைக் கழகத்தில் தென்மொழியையும் வடமொழியையும் பயின்று பட்டம் பெற்றவர். இருமொழிகளிலுமுள்ள இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்று வல்லவராக விளங்கிய பிள்ளையவர்கள் பல பண்டிதரை உருவாக்கி தமது இறுதிக் காலம்வரை செந்தமிழ் மரபைப் பேணி வந்தார் அத்தோடு தமிழ்ப் பால பண்டித தேர்வுக்குரிய 'தஞ்சைவாணன் கோவை' என்ற அகத்துறை இலக்கிய நூற்குச் சிறந்த விளக்கவுரை எழுதியுதவியதோடு மாத்திரம் நில்லாது பாடசாலை மாணவர்களும் தமிழ் மரபைக் கைக் கொள்ளும் நோக்கோடு பல உரைநடை நூல்களும் ஆக்கியுள்ளார்கள். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் பரீட்சகராகவும் ஆலோசகராகவும் பல காலமாக இருந்து அவர் ஆற்றிய பணியை மதித்து "பண்டிதமணி" என்ற கௌரவ பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார். இவர் இலங்கை கலாச்சாரப் பேரவையின் கௌரவத்தையும் பெற்றவர் இப்பெருமகனின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக!

# "தீண்டாமை முற்றாக ஒழிய வேண்டும்"

— மு. ஆலாலசுந்தரம்

[அரியாலை]

"தமிழ் மக்களின் மத்தியில் இன்று சாதிப்பிரச்னை ஒரு சாபக்கேடாக அமைந்திருக்கிறது. முன்பு இருந்ததைவிட தற்பொழுது இதில் வேகம் குறைவடைந்து வருகிறது. இதற்குக்காரணம் விடுதலை வேட்கைகொண்ட மக்கள் இதுவரை நடத்திவந்த போராட்டமும், தமிழ் மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ள மன மாற்றமுமே. தீண்டாமையை முற்றாக ஒழித்துக்கட்டவேண்டும் என்ற எண்ணம் தமிழ் பேசும் மக்கள் மனதில் நிலையான இடம்பெற்றுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதனை முன்னெடுத்துச் செயல் பட்டுவருகிறது"

இவ்வாறு நல்லூர்த்தொகுதி சமூகஅபிவிருத்தி இயக்கத்தின் கருத்தரங்கில் 'சமூக அபிவிருத்தி சம்பந்தமான செயல் திட்டங்கள்' என்னும் விடயம் குறித்து பேசிய த. வி. கூ. பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. மு. ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

திரு. நா. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:

'பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற வேண்டும். கல்வியின் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்

(5ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

தன்னைப்பற்றிப் பிறர் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதுமட்டும் நமக்குத் தெரிந்து விட்டால் இந்த உலகத்தில் ஒரு சிநேகிதன் கூட இருக்கமாட்டான்;

—காண்டேகர்

நாடு நடப்பு

இந்தியப் பிரதமர் மொரார்ஜிதேசாய் உஜ்ஜயினி என்னும் ஊரில் (20-11-77) ஓர் இரவு தங்கினர். வழக்கமாகக் காலையில் அவர் அருந்தும் ஒரே ஒரு தம்ளர் பால் கறப்பதற்காக மத்தியப் பிரதேச அரசாங்கம் ஆயிரம் ரூபாய் செலவிட்டு ஒரு பால் பண்ணையையே நடத்தியிருக்கிறது. இவர் வருகிறார் என்று தெரிந்ததும் "விலங்குகள் டிப்பார்ட்மெண்டார்" விரைவாகச் செயல்பட்டார்கள். பலஇடங்களிலிருந்து 200 பசுக்களைத் திரட்டி அவைகளிடையே 'பால் ராணிப் போட்டி' நடத்தி பசுவைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தப் பசுவுக்குக்கொடுத்து வந்த புல், தவிடு, பருத்திக் கொட்டை எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு, கோதுமை, பாதாம் பருப்பு, கொப்பரைத் தேங்காய், பார்லி முதலிய பணக்காரத் தினிகளையே ஊட்டினார்கள். 'வெட்டிநெறி' மருத்துவர்களின் மேற்பார்வையில் வைட்டமின் மாத்திரைகளையும் புகட்டினார்கள். இப்படியாக ஒரு கோமாதாவின்பேரில் ஆயிரம் ரூபா செலவிட்டு, ஒரு தம்ளர் பால் கறந்து அவருக்குக்கொடுத்தார்கள், வாழியரோ எளியவாழ்க்கைக் காந்தீயம்.

-பிளிட்ஸ்பத்திரிகையின் தலைவலை வைத்து சாலைஇளந்திரையனின் 'அறிவியக்கம்' இப்படி வெளியிட்டிருக்கிறது.

0 0 0

நமது நாட்டில் பிரதமர்கள், அமைச்சர்களின் சுற்றுலாக்களில் இப்படி எத்தனை நடைபெறுகிறதோ யார் கண்டார்கள்.

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது கொங்கிறீட்மேடைகள் அமைத்து இடித்ததெல்லாம் என்னவாம்!

0 0 0

யாழ்ப்பாண நகரில் வீதிகளில் வீட்டுக் குப்பைகளைக் கொட்டிக் குவிப்பது இப்போது ஒரு நாகரிகமாகவே போய்விட்டதென்று சொல்லலாம்.

சில இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றுக்கு வெளியேதான் குப்பைகளைக்கொட்டிக் குவிக்கிறார்கள்.

குப்பைத் தொட்டிகள் இல்லாத இடங்களுக்கு இப்போது மாநகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் குப்பைத் தகரங்களை வழங்குவதில் ஈடுபட்டிருக்கிறார்.

இனியாவது குப்பைகளை வீதிகளில் கொட்டாமலிருப்பார்களா?

ஒவ்வொரு வீட்டுக்காரரும் தமது வளவை மட்டுமல்லாது வீட்டின் முன்புறமுள்ள வீதியையும் சுத்தமாக வைத்திருக்க முன்வந்தால் நகரமே சுத்தமாக இருக்குமே!

# "உழைக்கும் வர்க்கத்துக்கே அரசு முதலிடம் அளிக்கும்"

## முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு



சென்னை, ஜன. 24 "உழைக்கும் வர்க்கத்துக்கே தமிழக அரசு முதலிடம் அளிக்கும்" என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் முதல்வர் திரு. எம். ஜி. ஆர். பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் சொன்னதாவது: "உழைக்கும் வர்க்கத்தை அரசு என்றும் ஒதுக்கிவைக்காது. நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் உழைக்கும் வர்க்கத்தை உரிய விதத்தில் கௌரவிக்காவிட்டால் தர்மம் நிலைக்குமா? எனவே தமிழக அரசு உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காகப் பணியாற்றத் தயங்காது."

### அதிகாரிகள் ஒத்துழைப்பு

அரசாங்க அதிகாரிகள் அரசின் திட்டங்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி அவை செவ்வனே நிறைவேற உதவவேண்டும்" என்றும் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

"வேலையற்ற லட்சக்கணக்கான மக்களின் துயர் துடைக்க தமிழக அரசு பல தொழிற்சாலைகளை நிறுவவுள்ளது" என்றும் முதல்வர் தம் உரையில் குறிப்பிட்டார். (உ)

# 'பசுவும் கன்றும்'

## இந்திராவுக்கு இல்லை

புதுடில்லி, ஜன. 24 இந்திய தேசிய காங்கிரஸின் பசுவும் கன்றும் சின்னம் திரு. பிரமானந்தரெட்டி குழுவினருக்கு தேர்தல் கமிஷனரால் வழங்கப்பட்டுள்ளதனையடுத்து திருமதி இந்திரா காந்தியின் நிலை என்ன என்பது பற்றி அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுந்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தல்களில் இச்சின்னத்துடன் திரு. பிரமானந்தரெட்டி தலைமையிலான காங்கிரஸ்குழு போட்டியிடவுள்ளது.

இந்திய காங்கிரஸின் மேற்படி தேர்தல் சின்னம் தமக்கே உரியது என்று திருமதி காந்தி கோஷ்டியினரும், திரு. பிரமானந்தரெட்டி கோஷ்டியினரும் தேர்தல் கமிஷனர் முன்னிலையில் தத்தம் வழக்கறிஞர்கள் மூலம் வாதாடியிருந்தனர். [உ]

# "வறிய நாடுகளுக்கான கடன் மதிப்பீடு வேண்டும்"

ஜெனிவா, ஜன. 24 உலகிலுள்ள வறிய நாடுகளுக்கான கடனை மறுமதிப்பீடு செய்வதன் மூலம் அந்நாடுகள் 60 கோடி ரூபாவை மீதப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று அன்டாட் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி காமினி கொரியா தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் அரசாங்க அதிகாரிகள் மாநாடு ஒன்றில் பேசுகையில் கலாநிதி கொரியா மேற்கண்டவாறு கூறினர். (உ)

# பரஸ்பர கண்டனங்களை கைவிடுக!

## எகிப்து-இஸ்ரேல் நாடுகளுக்கு அமெரிக்கா கோரிக்கை

வாஷிங்டன், ஜன. 24 மத்தியகிழக்குப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எகிப்தும், இஸ்ரேலும் தொடர்ந்து ஈடுபடும் என்ற நம்பிக்கை உண்டு என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜெருஸலப்பேச்சுவார்த்தைகளின் பின் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் முதல் தடவையாக மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். இஸ்ரேலும், எகிப்தும் ஒன்றையொன்று கண்டிப்பதை நிறுத்தவேண்டுமென்றும் திரு. வான்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பெகின் அறிவிப்பு

இதேவேளை, எகிப்திய பத்திரிகைகள் இஸ்ரேலுக்கு எதிரான கண்டனங்களைக் கைவிட்டாலே சமாதானமுயற்சி சாத்தியமாகலாமென்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

### அல்ஜீரியத் தலைநகரில்...

இது இவ்வாறிருக்க, எகிப்திய அதிபர் அன்வர்சதாத்தின் நடவடிக்கைகளுக்கு எதிரான அரபுநாடுகளின் தலைவர்கள் அல்ஜீரியத்தலைநகரில். உச்சிமாநாடு நடத்தவிருக்கின்றனர் என்று டமாஸ்கஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

### 6 பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டன

ஜாகர்த்தா, ஜன. 24 இந்தோனேஷியாவில் நாசகார வேலைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக நூற்றுக்கதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்புச் சபைத் தலைவர் அட்மிறல் சுதோமோ அறிவித்துள்ளார்.

இங்கு, ஆறு பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. அரசியலில் மாணவர்கள் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டசபைத் தேர்தல்:

# மூன்று வெளி மாநிலங்களில் எம். ஜி. ஆர்.-கருணாநிதி பலப்பரீட்சை?

சென்னை, ஜன. 24 எதிர்வரும் சட்ட சபைத் தேர்தல்களில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டுக்கு வெளியே 3 மாநிலங்களில் போட்டியிடும்.

பாரதத்தில் 6 மாநிலங்களுக்கும் ஒரு யூனியன் ஆட்சிப்பிரதேசத்துக்கும் அடுத்த மாத பிற்பகுதியில் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரம், அசாம், மேகாலயா மிசோரம் ஆகியவையே இந்த 6 மாநிலங்களாகும். தேர்தல் நடைபெற உள்ள யூனியன் ஆட்சிப்பிரதேசம் அருணாச்சலாகும்.

மேற்படி மாநிலங்களில் கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரம் ஆகிய 3 மாநிலங்களிலும் அ. இ. அ. தி. மு. க. போட்டியிடும்.

இம்மாநிலங்களில் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி ஆரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்மூன்று மாநிலங்களிலும் கர்நாடகத்திலேயே தமிழர்கள் அதிகமாக வாழ்கிறார்கள்.

மேற்படி மூன்று மாநிலங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகமும் போட்டியிடும் எனத் தெரிகிறது.

ஆகஇம்மூன்று மாநிலங்களிலும் அ. இ. அ. தி. மு. க.வுக்கும், தி. மு. க.வுக்கும் இடையில் தேர்தல்பலப்பரீட்சை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

கல்வி அமைச்சரின் யாழ். விஜயம்:

# வைபவங்களில் ஆசிரியர் பங்குபற்றக்கூடாது!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்) "கல்வியமைச்சரின் யாழ். விஜயத்தையொட்டி, கல்வித் திணைக்களம் ஏற்பாடுசெய்யும் வைபவங்களில் ஆசிரியர்கள் பங்குபற்றத் தேவையில்லை. இதற்கான டிக்கட்டுகள் விற்பனை செய்வதில் ஆசிரியர்கள் ஈடுபடத்தேவையில்லை. அப்படியான கடமைகள் செய்யும்படி பணிக்கப்படும்போது அதைச் செய்யாது விடவேண்டும்" என்று கோரும் முக்கிய தீர்மானமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம், சங்கப்பணிமனையில், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வனசிங்க தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களாவன:

"அரசின் மும்மொழித்திட்டத்தை எதிர்த்தல், இனமொழி ரீதியான எமதுபிரச்சினைகள் முழுமையாகதீர்க்கப்படும் வரை இவ்வகையான-எந்த வகையான நடவடிக்கைகளையும் எமதுசங்கம் முழுமையாக எதிர்க்கும்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்

[5-ம் பக்கம் பார்க்க]

### கிளைகள் புனரமைப்பு

(வவனியா) வவனியா தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவைக்கிளைகள் புனரமைப்புச் செய்யப்பட இருப்பதுடன் புதிய கிளைகளும் அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கின்றன. இதற்கான முயற்சிகளில் தமிழ் இளைஞர் பேரவை வவனியா அமைப்பாளர் திரு. பீற்றர் பொன்கலன் ஈடுபட்டுள்ளார். [உ]

### கோரிக்கை

[யாழ்ப்பாணம்] குற்றத்தடுப்புத் தொடர்பாக தாம் கூட்டவிருக்கும் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு சுன்னாகம் பொலிஸ் பகுதியில் உள்ள சனசமூக நிலைய, கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகளைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளைவேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. டக்ளஸ் ரன்முத்துகலவும் கலந்துகொள்ளவிருக்கும் இம் மாநாடு பெப்ரவரி முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது. [உ]

# இனம் ஈடேற என்னவழி?

## வவனியா சிவா சொல்கிறார்

[வவனியா] "சிந்தனைத்தெளிவும் தூய்மையான இலட்சியமும் தியாக உணர்ச்சியும் அரசியல் சாணக்கியமும் இருந்தால் எமதுஇனம் விரைவில் ஈடேறும் என்பதில் ஐயமில்லை".

இவ்வாறு பாவற்குளம் குடியேற்றத்திட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

திரு. தா. விக்கிரமசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது "எமக்குப் பல இன்னல்கள் நேர்ந்தாலும் எமது சுதந்திரத்திற்காக தொடர்ந்து பாடுபடவேண்டும் தமிழருக்கு என்று தனியே ஒரு குணமுண்டு அதில் இம்மியளவு வழுவாது தியாகங்கள் பல செய்தாவது எமது உரிமையை நிலைநாட்ட வேண்டும். இதற்கிடையே எமது தொகுதியின் அத்தியாவசியதேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்". [ஈ]

### நிர்வாகிகள்

[காரைநகர்] காரைநகர் ஊரிநல்லொழுக்க வாலிபர் இயக்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஊரிகிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இயக்கத் தலைவர் திரு. க. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஐ. பரமு, உபதலைவர் க. முருகையா, காரியதரிசி க. கந்தசாமி உபகாரியதரிசி வே. வைத்திலிங்கம், தனாதிகாரி க வேலுப்பிள்ளை போஷகர் செ. தவராசா. இக்கூட்டத்தில் விசேட பிரதிநிதிகளாக சுவீடன் நல்லொழுக்க வாலிபர் இயக்கப்பிரதிநிதிகளான திரு. பி. அன்டர்சன் திரு. தீபன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்) அரியாலை புனித யூதாகழகப் புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு. தலைவர் செ. அன்ரன், உபதலைவர் வசந்தி லூயிஸ், செயலாளர் எம். எம் றிச்சாட், உப செயலாளர் கு வதனி, பொருளாளர் செ. சேவியர். உபபொருளாளர். பி. ஜே. றஞ்சித் (அ)

பல்லவராயன்கட்டு

# மக்கள் கடைக்கு ஜி. ஏ. திடீர் விஜயம்

(வண்ணார்பண்ணை) சனிக்கிழமை முழங்காவில் குளாய்க் கிணற்றுத் திட்டம் சம்பந்தமாக முழங்காவிலுக்குச் சென்ற யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலா பல்லவராயன்கட்டு மக்கள் கடைக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டு பரிசோதனை நடத்தினர். அங்குள்ள விற்பனை ஏடுகளையும் அவர் பார்வையிட்டார்.

வெஸ்லி
(மரணிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
சுஜாதா-முத்துராமன்
வாழ்ந்து காட்டுகிறேன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30.
சரஸ்வதி சபதம்

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர் -ஜெயலலிதா
அரச கட்டளை

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
பணக்கார குடும்பம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜய.
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே பாலசந்தர்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ் நடித்த
"அவசரக் கல்யாணம்"
(புதிய பிரதி)
இத்துடன் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சியும் காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராணி
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது 2வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி
(யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆரின் அரசிளங்குமரி (புத்தம் புதியபிரதி)
... சிறுவர்களுக்கான படக் காட்சி ...
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
28-1-78 சனியும் 29-1-78 ஞாயிறும்
காலை 8-30 மணிக்கு
ROBINSON CRUSOE
[சினிமாஸ்கோப்—ஆங்கிலம்]
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்]

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 & 9-30 p. m.
SEAN CONNERY
in
"SHALAKO"
Color Scope Action

27-1-78 முதல்
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனு நாகேஷ்
நடித்த
உத்தரவின்றி உள்ளேவா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ

வீடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

RIO Daily 4 Shows
V.J. ROBBERY


# "நுட்பமான சட்டப் பிரச்னைகளை நுணுக்கமாக ஆராயும் வல்லுனர்"

## அமரர் குலசிங்கத்திற்கு மேல் நீதிமன்றத்தில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

'நுட்பமான சட்டப்பிரச்னைகளை நுணுக்கமாக ஆராய்ந்து நவீனமான கருத்துக்களையும் வியாக்கியானங்களையும் தரக்கூடிய சிறந்த கலைவல்லுனர் அமரர் குலசிங்கம்'.

யாழ். மேல் நீதிமன்றத்தில் அமரர் ஏ. வி. குலசிங்கத்தின் மறைவு குறித்து அஞ்சலி செலுத்துகையில் நீதிபதி ஜனப் எம். எம். அப்துல் காதர் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம், யாழ். நீதவான் திரு. கே. நவரத்தினம், மற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அண்மையில் அமரரான சட்டத்தரணி ஏ. வி. குலசிங்கம், சட்டத்தரணி ஹண்டி பேரின்பநாயகம், சட்டத்தரணி வி. ஆறுமுகம், சட்டத்தரணி மாணிக்கவாசகர் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீதிபதி ஜனப் எம். எம். அப்துல்காதர், ஏ. வி. குலசிங்கம் மறைவுகுறித்து மேலும் கூறியதாவது:-

அமரர் குலசிங்கத்தின் இல்லத்திற்குசென்று அஞ்சலி செலுத்தும் பாக்கியம்கிடைத்தது. அவர் எவ்வளவுதூரம் என் அப்புக்காத்து தொழில் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் நீதிசேவையில் யில் சேர்வதற்கு புத்திமதி கூறியும் எனக்கு வேறு பல வகைகளிலும் உதவிபுரிந்திருக்கிறார்என்றும்அங்குகூறினேன்.

அதன்பின் பேசிய திரு. கனகநாயகம், நான் தற்பொழுது இருக்கும் நிலபரத்திற்கு அமரர் குலசிங்கம் உதவி முக்கியமானது எனக் கூறினர். இது உண்மை எனவே நான் இன்றும் செய்யும் பணி ஓர் நன்றிக்கடன் அன்றி சம்பிரதாயச் செயல் அன்று.

அவருடன் ஒருவழக்கை ஆயத்தம் செய்வது ஒரு சிறந்த அனுபவமாகும். முதலில் ஆளமாக ஆராய்ந்து பின்னர் அவ் வழக்கிலுள்ள பிரச்னைகளை பெரும் பிரிவுகளாகவும், உப பிரிவுகளாகவும் குறிப்பு எடுப்பார். பின் ஒவ்வொரு பிரிவுக்கும் வேண்டிய சாட்சிகளையும் சட்ட விகிதர் தேவைகளையும் எழுதுவார்இவைகளைசேகரிக்கு மாறுபணிப்பார் அடுத்தமுறை கூடி ஆராயும்போது தேடிகண்டெடுத்த சட்டவிதிகளுக்கு அமைய கிடைக்கப்பெற்ற சாட்சிகளை அலகி ஆராய்ந்து வழக்கிலுள்ள பலம், பலவினத்தை எடுத்துரைப்பார்,

மன்றங்களில் அவர் வழக்கு நடத்துவதும் விசேட அழகு அவருடைய மதிநுட்பம் எவரையும் கவரும். கண்ணியமாக தன் சமர்ப்பணங்களை எடுத்துரைத்து எல்லா நீதிபதிகளும் அவரை கௌரவப்படுத்தும் தகுதி பெற்றிருந்தார். ஆனல் தன் வழக்கிற்கு தேவையானல் சட்டத்திற்கும், நிகழ்வுகளுக்கும் ஈடுபடும் நீதிபதியை வன்மையுடன் திருத்துவதற்கு பயந்தவருமல்ல.

அழகிய மொழியில் தன் வழக்கை எடுத்துரைக்கும் போது கேட்டுக்கொண்டிருக்கும் நீதிபதிக்கும், மற்ற சட்டத்தரணிகளுக்கும் அது ஒரு ஆனந்தம். மிகவும் தெளிவாக சிந்தித்து கூறுகூறாக பிரித்து மனக்குழப்பமெதுவுமின்றி தன் வழக்கை இலகுவான மொழியில் எடுத்துரைக்கும் போது எவருக்கும் இலேசாக அவரது சமர்ப்பணம் புரிந்துவிடும்.

சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதும் ஒரு தனிக்கலை. மிகவும் மிருதுவாகசாட்சிகளின் சந்தேகத்தை கிளறாது தன்னுடைய கட்சிக்காரருக்கு சாதகமான பல ஒப்புதல்களை பெறக்கூடியவல்லவர்.

நிறைந்த வாழ்வை குறைவாக அனுபவித்து பேரும் புகழும், கண்ணியமும்பெற்ற அவருக்கு, நன்றியுள்ள சமுதாயம் ஆகிய நாம் அஞ்சலி செலுத்துகின்றோம்.

சட்டத்தரணி எஸ். ஆர் கனகநாயகம் கூறியதாவது: இளமையில் விகிதராக சேர்ந்து சொந்த பிரயாசையால் உயர்ச்சி பெற்று, பத்திரிகை

(?-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் குடியேற்றம்

(வவனியா)

இராமநாதபுரத்தில் உள்ள அகதிகள் முகாமிலிருந்து 25 குடும்பங்கள் நெடுங்கேணியில் உள்ள டொலர்பண்ணையில் குடியேற்றப்பட இருக்கிறார்கள். இதற்கான முயற்சிகளை வவனியா தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. பீட்டர் பொன்கலன் மேற்கொண்டுள்ளார்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் இப்பண்ணையில் குடியேற்றப்பட்டுள்ளார்கள் எனவும் திரு. பீற்றர் பொன்கலன் தெரிவித்தார். (உ)

...

## மத்திய கல்லூரி வெற்றி

[யாழ்ப்பாணம்]

இன்னிங்ஸ்வித்தியாசத்தால் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வென்றது.

சென்ற கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரியினர் மொத்தம் 275 ஓட்டங்களைப் பெற்றனர். மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ஏ. பகீரதன் 122 ஓட்டங்களும், செல்வன் எஸ். உதயகுமார் 55 ஓட்டங்களும் பெற்றனர்.

முதலாது ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 75 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ஸ்ரீஸ்கந்தராஜா ஒருஓவரில் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 5 விக்கெட்டுகளைக்கைப் பற்றினர். 2-வது ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளைக் கைப் பற்றினர்.

இரண்டாவது ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 84 ஓட்டங்கள் பெற்றது. (கூ)

••••••

## வைபவங்கள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களில், அரசு கல்வியமைச்சுக்கு எதிரான போராட்டங்கள்-ஆர்ப்பாட்டங்களை எமது சங்கமே முன்னின்று ஏனைய சங்கங்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில்நடாத்தவேண்டும்''. [கெ]

—

## தீண்டாமை—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கக்கூடிய சாத்தியமானநிலை இன்று இல்லை. பொருளாதார வளம் உண்டானல் அவருடைய சந்ததி பொருளாதாரத்திலும்-கல்வியிலும் மேம்பாட்டையும் பொருளாதாரத்தைப் பெருக்க நமக்கெனச் சொந்தமான நிலம்வேண்டும். நாம் நமதுநாட்டை வளம்படுத்த முற்படாமையால் தான் நமது பாரம்பரிய தாயகம் பறிபோகிறது. தாயகம் பறிபோகும் அதேவேளையில் நமது பாரம்பரியமும், கலை-கலாச்சாரமும் பறிபோகிறதென்பதை தமிழ் மக்கள் உணரவேண்டும்.'' (உ)

## உதைபந்தாட்டப்போட்டி:

# மட்டுநகர் கோஷ்டி யாழ். நகர் வருகிறது

(யாழ்ப்பாணம்)

மட்டுநகர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் மோதுகின்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவில், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே நடாத்தப்படும் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்று ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில், யாழ். தெரிவுக் கோஷ்டியை எதிர்த்து - மட்டுநகர் தெரிவுக் கோஷ்டி மோதும். யாழ். தெரிவுக்கோஷ்டியை தெரிவு செய்யும் முகமாக, யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே தற்போது உதைபந்தாட்டப் பயிற்சி தினமும், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

## கொக்குவில் மகளிர் கல்லூரி

(திருநெல்வேலி)

கொக்குவில் இராமகிருஷ்ணு சாரதா மகளிர் கல்லூரி வட பகுதி வித்தியாதிபதி திரு. கீ. மாணிக்கவாசகரால் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு முன் திரு. மாணிக்கவாசகர் மங்கள வாத்திய சகிதம் பெற்றோர், மாணவர், பொதுமக்கள் புடைசூழ விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

சுவாமி விவேகானந்தா விஞ்ஞான கூடம், சுவாமி விபுலானந்த நூலகம் ஆகியவற்றையும் அவர்திறந்து வைத்தார்.

கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி தேவி கணேஸ்வரன் உட்பட மற்றும் பலரும் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [உ]

# வவனியா ஆசிரியர் இடமாற்றங்கள் ரத்து

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம், மாவட்டத்திற்குள்ளேயும், மாவட்டத்திற்கு வெளியேயும் முதலில் டிசம்பர் 31-ந் திகதி வரையும் பின்பு இம்மாதம் 31-ந் திகதி வரையும் பின் போடப்பட்ட இடமாற்றங்கள் யாவும் கல்வியமைச்சினுல் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

வவனியா தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் எடுத்த தீவிர முயற்சியினுலேயே இவ்விடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டன. (உ)

## அந்தியேஷ்டிக் கிரியைகள்



### பொன்னம்மாள் ஆச்சி

தோற்றம்: 15-7-1900
மறைவு: 3-1-1978

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் ஆதி வைத்திலிங்கம் செட்டியார் பரம்பரையைச் சேர்ந்த காலம்சென்ற கந்தப்பச் செட்டியாரின் கனிஷ்ட புத்திரியும் காலம்சென்ற பொன்னுச்சாமி செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார் வாலாம்பாள் ஆச்சி ஆகியோரின் சகோதரியும் ஒரத்தூர் காலம்சென்ற மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மனைவியும் காலம்சென்ற கண்ணம்பாள் ஆச்சியின் அண்ணியும் காலம்சென்ற சுவாமிநாதபிள்ளை, ஜெகதாம்பாள் சண்முகசுந்தரம் பிள்ளை, புனிதவல்லி, பாலகந்த செட்டியார், சரோஜா கந்தப்பச் செட்டியார், சக்குபாய் முத்துக்காயாரோகணம் செட்டியார் ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தப்பச்செட்டியார், முத்துக்காயாரோகணம் செட்டியார், மங்களாம்பாள் சுவாமிநாதன், ஜெகதா சீனிவாசன், தையலாம்பாள் சுந்தரமூர்த்தி, சுந்தரலிங்கம் செட்டியார் ஆகியோரின் அன்பு அத்தையும், ராஜேஸ்வரி சுந்தரலிங்கம் அவர்களின் பாட்டியாரும், சரோஜா கந்தப்பச்செட்டியாரின் புதல்வி ஜீவா சந்திரன், செல்வன்கள் வைத்திலிங்கம், அசோகன், ரமேஷ், சக்குபாய் முத்துக்காயாரோகணம் செட்டியாரின் புதல்விகள் உஷா குமரவேள், செல்வி ரேணுகா, செல்வன்கள் சுந்தரமூர்த்தி, ஷாயிஷங்கர் ஆகியோரின் அன்பு பாட்டியும் சுந்தரலிங்கம் செட்டியாரின் புதல்வி செல்வி மீராவின் பூட்டியுமாகிய பொன்னம்மாள் ஆச்சி அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் தஞ்சாவூர் ஒரத்தூரில் இன்று நடைபெறுவதுடன் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயத்தில் விசேஷ வழிபாடுகள் நடைபெற இருப்பதை நண்பர்களுக்கு அறியத்தருகிறோம். 8316

புலனிழந்தோர் கல்வித்துறையில்

# 'மேல்நாட்டார் ஏற்கும்விதத்தில் ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்'

## நவீல்ட் பாடசாலை அதிபர் விருப்பம்

[யாழ்ப்பாணம்]

''செவிடர்களானபிள்ளைகள் சிறந்த முறையில் கல்வி பெறுவதற்கு நவீன சாதனங்கள் முக்கியமல்ல, ஆசிரியர்களின் முயற்சியே முக்கியம்.''

இவ்வாறு கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலையின் அதிபர் திரு. டேவிட் கூறினார்.

கைதடி நவீல்ட் செவிடர், குருடர் பாடசாலையின் அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட் கடந்த ஒன்றரை ஆண்டு காலம் அமெரிக்காவில் உள்ள நோர்த்தம்ரன் நகரில் செவிடர், குருடருக்கான கல்வியில் பயிற்சி பெற்று நாடு திரும்பியதை யிட்டு அவருக்குப் பாடசாலை ஐக்கிய சங்கத்தினால் வரவேற்பு உபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது. சங்கத் தலைவரும் பதில் அதிபருமான திரு. கே. கோபாலகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதிபர் திரு. ஜே. எஸ். டேவிட் பேசும்போது, ''நாம் நினைக்கும் அளவுக்கு இன்னும் அமெரிக்க நாட்டினரும் புலனிழந்தவர்களின் கல்வியில் முன்னேற்றம் அடையவில்லை. இப்பொழுதும் புலனிழந்தவர்களின் கல்விபற்றி ஆராய்ச்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. செவிடர் சிறந்த முறையில் கல்வி பெறுவதற்கு நவீன சாதனங்கள் முக்கியமல்ல, ஆசிரியர்களின் முயற்சி இருக்குமானால் புலனிழந்தவர்களுக்கு சிறந்த கல்வியை அளிக்க முடியும். கற்பித்தலுக்குத் துணைக்கருவிகள் பத்து வீதமே உதவுகின்றன என்று சொல்லமுடியும். செவிடர் கல்வியைச் சிறந்த முறையில் கற்பதற்குத் தமிழ்மொழி மிகவும் ஏற்ற மொழியாக அமைந்துள்ளது. இத்துறையில் மேல்நாட்டினரும் ஏற்கக் கூடியதாக நாமும் பல ஆராய்ச்சிகளைச் செய்ய முயலவேண்டும்'' என்று குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது, கடந்த ஒன்றரை வருடமும் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. கோபாலகிருஷ்ணனின் சேவைத் திறனைப் பாராட்டினார்.

சங்கச் செயலாளர் திரு. ப. சந்திரசேகரம் பேசும்போது, ''செவிப்புலன் இழந்த குழந்தைகளின் பெற்றோர் தமது பிள்ளைகள் எப்படியாவது பேச வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். இதற்காக முதலாவது மருத்துவ நிபுணர்களையும் இறைவனையும் நாடி வேண்டுகின்றார்கள். இது நிறைவேறாதவிடத்து, ஆசிரியர்களைத் தெய்வமாக எண்ணித் தமது பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கின்றார்கள். ஆசிரியர்களும் இத்துறையில் அனுபவங்களை பெற்றுப் புலனிழந்த மாணவர்கட்குச் சிறந்த கல்வியைப் புகட்டக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்'' என்று குறிப்பிட்டார்.

மற்றும் ஆசிரியை செல்வி. பூ. மாரிமுத்து, திரு. வே. பீ. தேவதாஸ் ஆகியோரும் பேசினார்கள்.

## நுட்பமான...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியராக பணியாற்றி அரசியலிலும் பிரவேசித்து, பிரபல்யமடைந்தார். கமத்திலேயே சமுதாய முன்னேற்றம் தங்கியிருக்கிறதென்ற கருத்தை கொண்டவர்.

வழக்குகளை விரிவாக எடுத்துரைப்பதில், இந்த நீதிமன்றத்தில் மட்டுமன்று உயர்நீதிமன்றத்திலும் பிரசித்திபெற்றவர். சொந்த வழக்கில் அப்பீல் நீதிமன்றத்தில் வாதாடிய பெருமை அவருக்குண்டு.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்துடன் சேர்ந்து அரசியல் துறையில் சோல்பரி கமிஷன் போன்ற பல கமிஷன் முன் சாட்சியமளித்து அரசியல் ஞானியாக விளங்கினார். (க)

## 10ம் ஆண்டு அஞ்சலி

வட்டுக்கோட்டை

உயர்திரு.ப.மு.சங்கரப்பிள்ளை [சமாதான நீதவான்]

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 06 | 25 |
| 11 | 01 |
| 1906 | 1968 |



அன்புத் தந்தையே,

நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பத்தானாலும் உம்மை நாம் மறவோம். உம் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

8314 அன்னாரின் அன்பு மனைவியும் பிள்ளைகளும்.

## டிரக்டரில் சென்ற விவசாயி

# சுட்டுக் கொலை!

## மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாலைக்குலை என்னும் இடத்தில் அந்தோனிப்பிள்ளை என்ற 26 வயது விவசாயி துப்பாக்கியால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டார்.

'ட்ராக்டர்' ஒன்றில் சென்றுகொண்டிருக்கையில் இவரது உடலை எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக்குண்டு துளைத்ததாம்.

இக் கொலைக்கான காரணம் என்ன? மர்மக் கொலைஞன் யார் என்பது பற்றி மன்னார் பொலிசார் தீவிரவிசாரணை நடத்திவருகின்றனர். [உ]

## "செந்தமிழர் ஆகிடுவோம்" இன்று வெளியீடு

[யாழ்ப்பாணம்]

'செந்தமிழர் ஆகிடுவோம்', 'யானை' என்ற இருநூல்களின் வெளியீட்டுவிழா இன்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், 'ஒறேற்றர்' சி. சுப்பிரமணியம், திரு. நா. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவர்.

'செந்தமிழர் ஆகிடுவோம் நூலை திரு. வி. பொன்னம்பலமும், 'யானை' நூலை செங்கைஆழியானும் எழுதியுள்ளனர். (உ)

## முழ்மொழித்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இக்கூட்டம், இலங்கை மத்திய வங்கி கட்டட 9 ம் மாடியில், இம்மாதம் 26 ம் தேதி நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டுள்ள நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் இலங்கையின் பல பகுதிகளில், யாழ்ப்பாணம் உட்பட வங்கியின் கிளைகளை அமைப்பதை வரவேற்கும் நாம், இக்கிளைகள் குறிப்பாக திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் அமைக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்த விரும்புகின்றோம்.

தற்பொழுது வழங்கப்படும் விழாக்கால முற்பணம் 100 ரூபாவை அரசாங்க திணைக்களங்களில் வழங்கப்படுவது போன்று 200 ரூபாவாக அதிகரிக்கப்படல்வேண்டும்.

## நன்றி நவிலல்

### விஜயலக்ஷ்மி தர்மலிங்கம்

அண்மையில் காலமான வவனியா நிர்வாகப் பொறியியலாளர் இளையப்பா தர்மலிங்கத்தின் பாரியார் விஜயலக்ஷ்மியின் குடும்பத்தினர் அன்னாரது ஈமச் சடங்குகளில் கலந்துகொண்டவர்கள், அனுதாபச் செய்தியனுப்பியவர்கள், பல்வேறு வகையில் உதவிகள் நல்கியவர்கள் அனைவருக்கும் தங்கள் இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

'கவிதை', நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

8278


## லாலாசோப் ஸ்தாபனத்தாரின்

மற்றுமோர் தயாரிப்பு

சன்சயின் அரை பார் சோப்

15 மேல் உறையை சேகரியுங்கள்.

உங்களுக்காக ஒரு போட்டியை நடாத்த இருக்கிறோம்:

இதற்கான பரிசு

பெண்களுக்கான கண்கவர் வர்ணக்குடைகள்

25 இனும்!

சன்சயின் அரை பார் சோப்பின் மேலுறைகளை அனுப்பும் பொழுது உங்களுடைய பெயரையும் விலாசத்தையும் மிகத் தெளிவாக எழுத வேண்டும்.

இன்றே உங்கள் வர்டிக்கைக் கடைகளில்

சன்சயின் அரை பார் சோப்பை

கேட்டு வாங்கி மேலுறையை அனுப்புங்கள்.

இது ஓர் லாலா தயாரிப்பு!

லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி


## மரண அறிவித்தல்

### நா. காசிப்பிள்ளை

சாவகச்சேரி பிரபல வெற்றிலை வியாபாரி நா.காசிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் பூமணியின் அன்புக் கணவரும், இராமச்சந்திரன், பாலச்சந்திரன், ஞானச்சந்திரன், யோகச்சந்திரன், உதயச்சந்திரன், செல்வச்சந்திரன் ஆகியோரின் தந்தையுமாவார். ஈமச் சடங்குகள் இன்று புதன்கிழமை [25-1 78] பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்து மயானத்தில் நடைபெறும். 8306

இப்பத்திரிகை 'ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.